**செ. கு. எண்:085** **நாள்: 17.06.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

அறிக்கை– 17.6.2017

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், சௌடேஸ்வரி நகரைச் சேர்ந்த திரு தண்டபாணி என்பவரின் மகன் திரு திருமூர்த்தி மற்றும் திரு சுப்பிரமணியன் என்பவரின் மகன் திரு பாலகிருஷ்ணன் ஆகிய இருவரும் 10.6.2017 அன்று வேளாங்கண்ணியில் கடலில் குளிக்க சென்ற போது, எதிர்பாராத விதமாக கடல் அலையில் சிக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு திருமூர்த்தி மற்றும் திரு பாலகிருஷ்ணன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**